ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1976/4 - 2016 ජූලි මස 18 වැනි සඳුදා - 2016.07.18

*1976/4 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2016, யூலை மாதம் 19 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 6 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான 2016.01.20 ஆந் திகதி 1950/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 2016.03.08 ஆந் திகதிய 1957/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சீனி (எச். எஸ். தலைப்பு இல. 17.01) சம்பந்தமான உத்தரவு 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, யூலை 18.*

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| 1. | 03.05 | 0305.59.10 | மாசி மீனும் அதற்குப் பதிலானவையும் | ரூபா 102.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 2. | | 0305.59.20 | உலர்த்திய நெத்தலிக் கருவாடு உப்பிடப்படாதவை | ரூபா 11.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 3. | 07.13 | 0713.31.19 | பிற - பாசிப்பயறு | ரூபா 10.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| 4. | | 0713.31.29 | பிற - உழுந்து | ரூபா 60.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| 5. | 09.04 | 0904.21.10 | மிளகாய் - காய்ந்த நசுக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை | ரூபா 25.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0904.22.10 | மிளகாய் - நசுக்கப்பட்டவை அல்லது அரைக் கப்பட்டவை | ரூபா 125.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0904.22.90 | பிற- நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப் பட்டவை | ரூபா 125.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 6. | 09.09 | 0909.21 | கொத்தமல்லி நசுக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை | ரூபா 26.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0909.22 | கொத்தமல்லி நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை | ரூபா 52.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 7. | 09.10 | 0910.30.10 | மஞ்சள் - நசுக்கப்படாதவை அல்லது அரைக் படாதவை | ரூபா 102.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0910.30.90 | மஞ்சள் - பிற | ரூபா 360.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 8. | 11.06 | 1106.10.10 | உழுந்து மா | ரூபா 200.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 9. | 16.04 | 1604.11 | சால்மோன் | ரூபா 50.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.12 | ஹேறிங்கள் (ஒருவகை சிறு கடல் மீன்கள்) | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.13 | சாடின், சாடினெல்லாவும் பிறிஸ்லின் அல்லது நெத்தலி | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.14 | ரியுனாக்கள், ஸ்சிப்ஜாக்கும் போளிற்றோவும் (சார்டா இன) | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.15 | மக்கறல் | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.16 | அஞ்சோவிஸ் | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.17 | விலாங்கு மீன் | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.19 | பிற | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1604.20 | பிற தயாரிக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட மீன்கள் | ரூபா 50.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | | கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்கோறோஸ்) வெல்லமும் திண்மையான உருவில் | |
| 10. | 17.01 | | பதனிடப்படாத சீனி, மேலதிக மணமூட்டப் படாதவையும் நிறமூட்டப்படாதவையும் | |
| | | 1701.12 | பீற் சீனி | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.13 | கரும்பு வெல்லம் | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.14 | பிற கரும்பு வெல்லம் | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு |
| | | | பிற | |
| | | 1701.91 | மேலதிக மணமூட்டப்பட்டவை அல்லது நிறமூட்டப்பட்டவை | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| | | *1701.91.10* | சீனி | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு அல்லது |
| | | *1701.91.90* | பிற | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு அல்லது |
| | | *1701.99* | பிற | |
| | | *1701.99.10* | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு வெல்லம் | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு அல்லது |
| | | *1701.99.20* | வெள்ளைப் பளிங்குருவான பீற் வெல்லம் | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு அல்லது |
| | | *1701.99.30* | பிற வெல்லம் | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு அல்லது |
| | | *1701.99.90* | பிற | 25 சதம் கி. கிராம் ஒன்றுக்கு அல்லது |

*08- 74*